" தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு "

நகரத்தார் சங்கம்

(பதிவு எண் 16/1956)

மதுரை.

★

எட்டாவது ஆண்டு அறிக்கை

10—1—1965

★

1963 - 1964

செயற்குழு :

...ந்தை திரு. கருமுத்து. தியாகராசன் செட்டியார்

...பர்கள்: திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
திரு. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்

செயலர் : திரு. ஆவி. க.மெ. அரு. தியாகராசன்செட்டியார்
திரு. சுப. அண்ணமலை

பொருட்காப்பாளர்: திரு. சுப. அ. நடராசன் செட்டியார்

உறுப்பினர்கள் :

திரு. தி. சுந்தரம் செட்டியார்
" தி. மாணிக்கவாசகம் செட்டியார்
" லெ. நாராயணன் செட்டியார்
" சி. க. அரு. சோம இராமநாதன் செட்டியார்
" இராம ஆறு. சுப்பிரமணியன் செட்டியார்
" டாக்டர் S. சண்முகம் செட்டியார்
" நா. சுப. நாகப்ப செட்டியார்
" நா. சுப. கா. சுப்பிரமணியன் செட்டியார்
" AL. மாணிக்கம் செட்டியார்
" A. அருணசலம் செட்டியார்
" மெ. சு. உ. சுப. வே. வேலாயுதம் செட்டியார்
" கும. நா. சுப. நா. மாணிக்கம் செட்டியார்
" AR. L. இராமநாதன் செட்டியார்
" KR. சேதுராமன் செட்டியார்
" RM. முத்துப்பழனியப்ப செட்டியார்
" பழ. லெ. நடராசன் செட்டியார்
" நா. சு. சுப்பிரமணியன் செட்டியார்
" செ. செல்லப்பன்
" T. தேனப்ப செட்டியார்
" AR. சேதுராமன் செட்டியார்
" A. இராமநாதன் செட்டியார்
" சொ. அருணசலம் செட்டியார்
" S. அழகுசுந்தரம் செட்டியார்
" டாக்டர் மெ. சுந்தரம்
" நா. அ. இராம. கா. இராமநாதன் செட்டியார் (கண்டனூர்)
" ராம வீர. இராமசாமி செட்டியார் (காரைக்குடி)
" மெ செ. மெ மெ. சொக்கலிங்கம் செட்டியார் (")
" சோம. லெ. லட்சுமணன் செட்டியார் (நெற்குப்பை)

உ
சிவமயம்

நகரத்தார் சங்கம், மதுரை

(பதிவு எண். 16/1956)

நகர விடுதி

25, வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

எட்டாவது ஆண்டு அறிக்கை.

பேரன்பு சான்ற பெருமக்களே,

வருக, வருக. தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டித் தலை நகராம் மதுரையில் அமைந்த நமது நகரத்தார் சங்கத்தின் ஏற்ற மிகும் எட்டாவது ஆண்டு விழாவிற்குப் பொலிவு சேர்க்க வந்திருக்கும் தங்கள் அனைவரையும் கைகூப்பி வரவேற்கின்றோம்.

'எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம்' ஆகிய அங்கயற்கண்ணியிப் பொங்குபேர் அருளினால் நமது நகரத்தார் சங்கம் எட்டு ஆண்டுகளாக நம் குலம் ஏற்றமுறப் பணிசெய்து நல்லவரும் வல்லவரும் போற்றும் வண்ணம் அவருள்ளத்தைத் தொட்டு நிற்கிறது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகிறோம். தமிழ்ப் புலமையும் தொழில் வளமும் தழைத் தோங்க நாளும் உழைத்து வரும் 'கலைத்தந்தை' திரு. கருமுத்து. தியாகராசன் செட்டியார் அவர்களின் அரிய தலைமையை நமது சங்கம் தொடக்கம் முதற் பெற்றுப் பெரும்பயனடைந்து வருகின்றது. காலஞ்சென்ற வ. சொ. ராம. வள்ளியப்ப செட்டியாரவர்கள் நம் சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டதை நாம் என்றும் மறக்க இயலாது.

துணைத்தலைமை ஏற்றவர்களும், செயற்குழு உறுப்பினர்களும் காலத்தால் செயலாற்றிச் சங்கத்தின் நற்செயல்கள் திறமாக நிறைவேற ஒத்துழைப்புத் தந்தனர். அவர்கள் கொட்டித்தரும் அன்பாலும் அறிவுரையாலும் நம் சங்கம் இன்னும் எத்துணையோ ஆண்டுகளை எட்டிப் பிடித்து விழா எடுக்கும்; நம் குலத்தினரின் பெருமிதமான வளர்ச்சியோடு தன்னைப் பிணைத்துக்கொள்ளும்; இளைஞர்களின் கல்வி வரலாற்றில் தக்கதோர் இடம் பெறும்.

...தாடங்கிய காலம் முதல் நகரத்தார்களின் நற்பணி ...து. 'கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது' பல் பண்டம் பகர்ந்து வீசியும், திரைகடலிடையே பெருங்கலம் ஊர்ந்தும் வாணிபம் செய்து பெரும் பொருள் ஈட்டிய அவர்கள் இமயம் முதல் குமரிவரை கோயில் கட்டுதல், பழைய கோயில்களைப் புதுக்கித் திருப்பணி செய்தல் ஆகிய தெய்வப் பணிகளையும் சத்திரம் அமைத்தல், பாடசாலைகள், கல்விச்சாலைகள் நடத்துதல் ஆகிய மனித குலப்பணிகளையும் நன்கு புரிந்து வந்திருக்கிறார்கள். அவர்களின் வற்றாக் கொடையால் பாண்டி நாட்டில் சைவமும் தமிழும் தழைத்து இனிதோங்கின. சிவராசதானி எனச் சிறப்பித்துக் கூறப்படும் மதுரையம்பதியில் 'பிறவாயாக்கைப் பெரியோனாகிய' சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயில் நகரத்தாரின் திருப்பணிகளால் கோபுரமும் திருமதிலும் திருச்சுற்று வீதியும் மண்டபங்களும் பெற்றுப் பொலிவடைந்தது. மதுரை மட்டுமோ, தேவாரப் பாடல் பெற்ற கோயில்களில் பெரும்பான்மை நகரத்தார்களின் திருப்பணியாற் புதுப்பிக்கப்பெற்றுள்ளன. தொண்ணூற்றாறு ஊர்களில் மாடமாளிகைகள் அரண்மனைகள் போல் கட்டப் பெற்றன. மன்னரைப் போல் தலைநிமிர்ந்து வாழ்ந்தனர் நகரத்தார் பெருமக்கள். இன்றும் ஆண் குழந்தையை 'அரசு' என்று குறிப்பிடும் செட்டிநாட்டுப் பெண் மக்களின் வழக்கு இதற்கு ஒரு சான்றாகும்.

நகரத்தார்குடி இப்பொழுது செல்வ நிலையிற் சுருங்கி ஏற்றமும் தோற்றமும் குன்றியிருக்கின்றது. நாடு போற்றும் நல்ல பண்பாடும், நாகரிகமும், அறிவுத் திறனும் நம் குலத்தினரின் இயற்கைப் பண்புகளாய் இருப்பினும் இவற்றைச் செயற்படுத்த உதவும் பொருள் வளமும், அப்பொருளை இக்காலத்துப் புது முறைகளில் ஈட்ட உதவும் அறிவியல், தொழிலியல், நுட்பவியல், வணிக வியற் கல்வியும் நம் நாட்டுப் பிற குலத்தினருக்கு வாய்த்துள்ளது போல நம்குலத்தினருக்கு மிகுதியாக வாய்க்கவில்லை. வெளிநாடுகள் எல்லாம் நம் நாட்டினருக்கு அடைத்த நெடுங்கதவுகளையுடையன வாய் விட்டன. அவை ஓரொரு கால் திறப்பதும் அங்கு எஞ்சியுள்ள நம் நாட்டவரை வெளியேற்றுவதற்காகவே. நூறாயிரக் கணக்கில் தமிழர் கூட்டம் வெளிநாடுகளிலிருந்து வரத் தொடங்கி விட்டது.

பதினைந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டு மக்கள் தொகை இன்னும் $\frac{1}{2}$ கோடி உயரும். அதற்கு ஏற்ப வாழ்க்கை வசதிகள் குறையும். வேலை வாய்ப்புக்களுக்குப் போட்டி பெருகும். அப் போட்டியில் நம் குலத்தினர் வெற்றி பெறவேண்டுமானால் மேற் சொன்ன அறிவியற்கல்வி, தொழிலியற் கல்விகளில் அவர்கள் மிகுதியாக ஈடுபடவேண்டும். உயர்பட்டமும் தொழிற்பயிற்சியும் நுட்பமுணாரும் ஆராய்ச்சியும் பெறுதல் வேண்டும். இவற்றைப் பெற விரும்பும் மாணவர்க்கெல்லாம் கல்விக்காலச் செலவிற்குப் பொருள் இல்லாததுதான் இப்பொழுது பெருங்குறை. முன்னோர் அன்று கட்டிவைத்த மலையனைய பெருமனைகளை வாழ்க்கைச் செலவிற்காகக் கூரை பிரித்து வெறுமனையாக்கிவிட்டன பல குடும்பங்கள். இந்நிலையில் பிள்ளைகளை உயர் கல்விக்கு அனுப்பப்

பணத்திற்கு எங்கேபோவர்? தனிப்பட்ட குடும்பத்தா[illegible] வியலாத பெருஞ் செயல்களைக் குலத்தினர் எல்லாரும் சங்க[illegible] கூடி ஒருமித்து நின்றால் எளிதாகச் செய்ய வியலும். ஆதலின் மதுரையில் சங்கம் அமைத்து ஏழை மாணவர்க்கு உயர்கல்விக்கு உதவிச்சம்பளம் வழங்கத் தொடங்கினோம். நம் குலப்பெருமக்கள் நம் சங்கத்தின் புரவலராகவும் நன்கொடையாளர்களாகவும் உறுப்பினர்களாகவும் அமைந்து இன்றுவரை உதவியுள்ள தொகை ரூ. 70440 இலிருந்து இன்றுவரை 125 மாணவர்கட்குத் திரும்பப் பெறும் உதவித்தொகை ரூ 57720 அளித்துள்ளோம். அவர்களில் 25 பேர் நாம் கொடுத்த தொகைகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டனர். வரும் ஆண்டுகளில் மிகுதியான மாணவர்கட்கு உதவிச் சம்பளம் வழங்கி நம் குலத்தின் கல்வித்தகுதியைப் பெருக்குதல் வேண்டும். இதற்குப் புதிதாக நன்கொடைகள் திரட்டவேண்டும். நம் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர், உறுப்பினர் தொகை பெருகவேண்டும். புது உறுப்பினர் சேரச் சேரப் பழைய உறுப்பினர்கள் தம் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளாமல் நிறுத்தி விட்டதைச் சென்ற சில ஆண்டுகளில் கண்டுவருந்துகிறோம். தனிப்பட்ட முறையில் செலவுகள் எத்துணை இருப்பினும் ஏழைமையின் பிடியில் சிக்கியுள்ள நம்குலத்தை மீண்டும் எடுத்து நிறுத்தி உயரச் செய்யவேண்டிய பணியின் இன்றியமையாமையை உணர்ந்து உறுப்பினர்கள் யாவரும் தொடர்ந்து சந்தாச் செலுத்தும்படி பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

சென்ற ஆண்டு மட்டும் 45 பெருமக்கள் வாழ்நாள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார்கள். இன்னும் பெருமக்கள் பலரும் நம்மவர் நடத்தும் நிறுவனங்களும் வாழ்நாள் உறுப்பினராகச் சேர்ந்து சங்கத்தின் நற்பணிகள் பெருக உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம். நம் சங்கத்தலைவர் கலைத்தந்தை உயர்திரு. கருமுத்து. தியாகராசன் செட்டியார் அவர்கள் ஏற்கனவே நன்கொடையாகத் தந்துதவிய ரூ 5000/= தவிரச் சென்ற ஆண்டுவிழாவில் ரூ. 1001/= நன்கொடையாக அளித்தார்கள். சென்ற ஆண்டு நம் சங்கச் செயலராகப் பணியாற்றிய திரு. பெரி உடையப்பன் அவர்கள் ரூ. 500/= நன்கொடையாகத் தந்துதவினார்கள். இராயவரம் திரு. தெ. நா. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் நாம் கேட்காமல் தாமாகவே நம் சங்கத்திற்கு நன்கொடையாக ரூ. 251/= வழங்கினார்கள். இப்பெருமக்களுக்கு நம் மகிழ்ச்சி கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கலைத்தந்தை அவர்கள் ஏற்கனவே செய்து வந்ததுபோல் நம்குலப் பெண்களின் திருமணத்திற்கு ரூ. 1501/= கொடுத்துதவி வருகிறார்கள். காரைக்குடி திரு. இராம. வீர. இராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் தம் இல்லத்திலேயே தம் செலவில் நம்குலப் பெண்களுக்குத் திருமணம் செய்வித்தும் ஏழை மாணவர் கல்விக்கு உதவியும் வருகிறார்கள். இவ்வுதவியை நம்மவர்கள் நிறையப் பயன்படுத்திக் கொள்வார்கள் என நம்புகிறோம்.

கலைத்தந்தை அவர்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரும் வழக்கம்போலவே இவ்வாண்டும் நம்குல மாணவர்கட்குப்

குறை மேல் வகுப்பிலும், இளங்கலைத்துறை வகுப்பிலும் இடம் கொடுத்து உதவி வருகின்றமைக்கு அவர்கட்கு நம் நன்றி.

மலேயாவில் பேரா ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலின் ஆட்சிக்குழுவினரும், பினங்கு ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் ஆட்சிக்குழுவினரும், ஈப்போ நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் ஆட்சிக்குழுவினரும் இவ்வாண்டில் செட்டி நாட்டில் நம் குலத்தினைச் சேர்ந்த பெண்களின் திருமணத்திற்கு ரூ. 2000|= வீதம் கொடுப்பதென்றும் நம் குல மாணவர்களின் உயர்படிப்பிற்காக ஒரு மாணவனுக்கு ரூ. 500|= வீதம் படிப்பு முடியும் வரை கொடுப்பதென்றும் முடிவு செய்திருக்கின்றனர். இவைபோன்ற நற்செயல்களை மலேயாவில் உள்ள மற்ற ஊர் நகரத்தார்களும் செய்ய இருக்கின்றார்கள். செட்டி நாட்டில் உள்ள நம் குலத்தினர் இவ்வுதவிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டுகிறோம். மதுரை விசாலாட்சி ஆலை, திருத்தணி சரசுவதி ஆலைகளின் உரிமையாளர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்களும் தம் அறநிதியிலிருந்து நம்மவர் திருமணங்களுக்கு 501|= கொடுத்துதவுவதாக நம் சங்கப் பேரவையில் வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

பர்மாவில் இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையை ஒட்டி அங்கு இயங்கி வரும் ஸ்ரீ காசி நகரச் சத்திர ஆட்சிக் குழுவைக் கலைத்துவிட்டு, இந்தியாவில் புதுக்குழு ஏற்படுத்தி அதன் அலுவலகத்தை மதுரையில் நடத்துவதென முடிவு செய்திருக்கிறார்கள். இச்செயல்களை நடத்துவதற்காக அமைத்துள்ள இடைக்காலக் குழுவில் நம் சங்கத்திற்கும் மதிப்புக்கொடுத்து உறுப்பினராக்கியுள்ளார்கள்.

மலேயாவில் நம் சங்கத்திற்கு நன்கொடை சேர்ப்பதற்கும், வாழ்நாள் உறுப்பினர் சேர்ப்பதற்கும் அங்கு வருமாறு அங்குள்ள நம் சங்க அன்பர்கள் அடிக்கடி கடிதம் எழுதி வருகிறார்கள். கூடிய விரைவில் அங்குச் சென்று நம் சங்கத்திற்கு நிதி திரட்ட எண்ணியுள்ளோம். அச்சமயம் அப்பகுதியில் உள்ள நம் சங்க உறுப்பினர்களும், மற்றவர்களும் நம் சங்கத்தவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்கவேண்டுகிறோம்.

சென்ற ஆண்டு நம் சங்கத்தில் வாழ்நாள் உறுப்பினர்களாகச் சேரும் பொருட்டுக் காரைக்குடி சோலையப்பா எலக்டிரிக் ஸ்டோர் உரிமையாளர் திரு PL. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை திரு. PL. L. L. லக்ஷ்மணன் செட்டியார், காரைக்குடி திரு. தி. நா. நாராயணன் செட்டியார் ஆகிய பெருமக்கள் நம் சங்க வசூல் புத்தகத்தில் எழுதித் தந்திருக்கிறார்கள். அதன்படி விரைவில் தந்துதவுவார்கள் என நம்புகிறோம்.

காரைக்குடியில் அழகப்பா கல்லூரி முதல்வர் டாக்டர் திரு. வ. சுப. மாணிக்கம் அவர்களைத் தலைவராகக் கொண்டும் திரு. இராம. பெரியகருப்பன் அவர்களைச் செயலராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ள இந்தியப் பல்தமிழ்க் கழகம் தமிழுக்குப் பல்

லாற்றுனும் தொண்டாற்றி வருகிறது. அக்கழக களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் நகரத்தார்கள் பெற்றுப் பயன் அடையவேண்டுகிறேம்.

மேலைச்சிவபுரியில் வ. பழ. குடும்பத்தார் கணேசர் செந்தமிழக் கல்லூரி நிறுவித் தமிழுக்குப் பல்லாண்டுகளாகப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்க செயலாகும்.

காரைக்குடியில் திரு. சா. கணேசன் அவர்கள் முயற்சியில் பல ஆண்டுகளாகக் 'கம்பர் விழா' சிறப்பாக நடந்து வருகிறது.

காரைக்குடியில் நகரத்தார் மாணவர்களால் திருக்குறள் விழாவும், தேவகோட்டையில் ஆவி. க. குடும்பத்தாரால் திருக்குறள் விழாவும், தேவகோட்டை நகரத்தார்களால் கந்தர் சஷ்டி விழாவும் ஆண்டுதோறும் சிறப்புடன் நடத்தப் பெற்று வருவது பாராட்டுதற்குரியது. காரைக்குடிக் கம்பர் விழா, தேவகோட்டைக் கந்தர் சஷ்டி விழா நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் திருச்சி அனைத்து இந்திய வானெலி நிலையத்தாரால் ஒலிபரப்பு அஞ்சல் செய்யப் பெறுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

பெங்களூருக்குப் பக்கத்தில் 10 மைல் தொலைவில் உள்ள மச்ச ஹள்ளி என்னும் இடத்தில் பள்ளத்தூர் திரு. உ. அ. பெரி. மு. அரு. அடைக்கப்பச் செட்டியார் அவர்கள் குழந்தைகள் வளர்ச்சி கருதிக் குழந்தைகள் கிராமம் அமைத்துத் தலைவராகப் பொறுப் பேற்றுப் பணிபுரிந்து வருகிறுர்கள்.

பள்ளத்தூர் திரு. மு. வெ. அருணசலம் செட்டியார் அவர்கள் தென்னிந்திய வாணிகக் கழகத்தலைவராகவும், சென்னைச்சுழற்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள் என்பதையும் விசாலாட்சி ஆலை அதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் மதுரை-இராமநாதபுரம் வர்த்தக சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறுர்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

சென்ற 19—7—64உயன்று நிகழ்ந்த செயற்குழுக் கூட்டத்தில் 42 மாணவர்கட்குத் திரும்பப் பெறும் உதவித் தொகையாக ரூ. 27300/- கொடுப்பதென்று முடிவு செய்யப் பெற்றது. இவ்வாண்டும் பல பேருக்கு வேலை பெற்றுத் தந்துள்ளோம்.

நம் சங்கத்தின் மேற்பார்வையில் உள்ள திருப்பரங்குன்றம் நகர விடுதிக் கட்டிடத்தில் இன்றியமையாத மராமத்துக்களையும் வண்ணம் பூசும் வேலைகளையும் நம் சங்கத்தின் சார்பில் இந்தியா கிளாத் ஸ்டோர் திரு. நா. சுப. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் தம் சொந்தப்பணி போல் மேற்பார்வையிட்டுச் செய்து முடித்துத் தந்தார்கள். அவர்கட்கு என்றும் நன்றியுடையோம். அப்பணிகளுக்கென ரூ. 4000/- செலவு ஆயிற்று. அவ்விடுதியில் இன்னும் எஞ்சியுள்ள மராமத்து வேலைகளையும் அவ்வண்ணமே

உ

சிவமயம்.

நகரத்தார் சங்கம்

ஏழாவது ஆண்டுவிழா
&
பேரவைக் கூட்ட அழைப்பிதழ்

10—11—1963

★

நகர விடுதி,
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-1.

உ

சிவமயம்.

அன்புசால் பெருந்தகையீர்!

வணக்கம்.

நம் சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழாவும் பேரவைக் கூட்டமும் நிகழும் சோபகிருது ஆண்டு ஐப்பசித் திங்கள் 24-ஆம் நாள் (10-11-63) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு நம் சங்கத் தலைவர் 'கலைத் தந்தை' திரு. கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் தலைமையில் வடக்குச் சித்திரை வீதியில் உள்ள நம் நகர விடுதியில் நடைபெறும்.

அவ்வமயம் மலேயாத் தொழிலதிபரும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இயக்குநருமான தமிழ் வள்ளல் திரு உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகைதந்து நம் சங்கத்தின் சார்பில் தோற்றுவிக்க இருக்கும் நூல் நிலையத்தைத் துவக்கி வாழ்த்துரை வழங்குவார்கள்.

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் தவறாது வந்திருந்து விழாவைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் அன்புள்ள,

ஆவி. க. மெ. அரு. தியாகராசன் செட்டியார்,

பெரி. உடையப்பன்.

செயலர்.

4—11—63,

மதுரை.

நிகழ்ச்சி நிரல்

மாலை	3-30	மணி.	தேனீர் விருந்து
,,	4-00	,,	இறை வணக்கம்
,,	4-05	,,	வரவேற்புரை. செயலர் அரு. தியாகராசன்
,,	4-30	,,	அறிக்கை அளித்தல்
,,	4-45	,,	தலைவர் முன்னுரை. 'கலைத்தந்தை' கருமுத்து. தியாகராசச் செட்டியார்
,,	5-15	,,	நூல் நிலையத் திறப்பு 'தமிழ்வள்ளல்' சேவு. மெ, மெய்யப்பச் செட்டியார் பாராட்டுரை:
,,	5-30	,,	டாக்டர் மெ. சுந்தரம்
,,	5-45	,,	பாலகவி-வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியார்
,,	6-00	,,	'உலகம் சுற்றிய தமிழர்' சோம. லெ. இலக்குமணச் செட்டியார்
,,	6-15	,,	சுப. அண்ணாமலை, M. A., M. Litt.,
,,	6-30	,,	தீர்மானங்கள் நிறைவேற்றல்
,,	6-45	,,	பேரவை அலுவல்கள்
,,	7-00	,,	தலைவர் முடிவுரை
,,	7-15	,,	நன்றி நவிலல்
,,	7-20	,,	நாட்டு வாழ்த்து

விஜயா மதுரை-63

...வையாக நிறைவேற்றித் தருவார்கள் என்

...ரைக்கு 15—12—63உயில் வந்த தமிழகச் சுகாதார அமைச்சர் சோதி வேங்கடாசலம் அவர்களிடம் மதுரை நகரவிடுதிக்கு அண்மையிலும் மொட்டைக் கோபுரத்து முனீசுவரர் சந்நிதிக்கு எதிரிலும் உள்ள கழிவு அறையை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு விண்ணப்பம் அளித்தோம். அவர்கள் தாம் சென்னை சென்று, விரைவில் அதற்கென அரசிலிருந்து மதுரை நகரவைக்கு ஆணை அனுப்பி வைப்பதாக உறுதி தந்தார்கள். அதன்படி நகரவைக்கு ஆணை வந்துள்ளது. அதிகாரிகள் இக் கழிப்பு அறையைப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். 25—10—64ல் இங்கு வந்த தமிழக உள்துறை அமைச்சர் திரு. P. கக்கன் அவர்களிடமும், மதுரை நகரசபைத் தலைவரிடமும் இச் செய்திகளைக் கூறி, திருத்தலப் பயணிகள் தங்கிச் செல்லும் நம் விடுதிக்கு விதிக்கப்பட்டு வரும் நகராட்சி வீட்டு வரியைத்தள்ளுபடி செய்ய ஆவன செய்யுமாறு வேண்டிக் கொண்டோம். இவ்விரண்டு குறைகளும் விரைவில் அறவே நீக்கப்பட்டு விடும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீனாட்சி ஆலை இயக்குநர் திரு. தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்களும், விசாலாட்சி ஆலை அதிபர் திரு. லெ. நாராயணன் செட்டியார் அவர்களும் அவர்களின் துணைவியார் திரு. சரசுவதி ஆச்சி அவர்களும் எகிப்து சென்று திரும்பியமை குறித்துக் காரைக்குடி நகரவைத் தலைவர் திரு. அரு. மு. மு. அருணசலம் செட்டியார் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடத்தப் பெற்றது.

மீனாட்சி ஆலைகள் குழுவின் கோவைப் பகுதி ஆட்சித் தலைமையலுவலர் திரு. இராம. சேது அவர்கள் அமெரிக்காவில் வணிக ஆட்சிப் பயிற்சி பெற்றுத் திரும்பியது குறித்தும், டாக்டர் திரு வ. சுப. மாணிக்கம் அவர்கள் காரைக்குடி அழகப்பர் கலைக்கல்லூரியின் முதல்வராகப் பதவி ஏற்றமை குறித்தும், மதுரை சௌத் இந்தியா கார்ப்பரேஷன் மேலாளர் திரு. T. தேனப்பன் அவர்கள் சிமிந்துத் தொழில் வளர்ச்சி தொடர்பாக மேற்குச்செர்மனி சென்று திரும்பியமை குறித்தும் தேவகோட்டை திரு. ந. அருணசலம் செட்டியார் அவர்கள் M. P., தலைமையில் 11—10—64 உயன்று பாராட்டு விழாச் சிறப்பாக நடத்தினோம். அவ்விழாவில் நம் வேண்டுகோளுக்கு இணங்கி அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் கீழ்த்திசைக் கலைத்துறைத் தலைவருமான உயர்திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் அன்புடன் பங்கு கொண்டு விருந்தினர்களைப் பாராட்டிச் செவிவிருந்து அளித்துச் சென்றார்கள். அவர்கட்கு நம் நன்றி உரியது.

நம் சங்கத்தின் சார்பில் தொடக்கம் முதல் நடத்தி வரும் பாராட்டு விழாக்களுக்காகும் செலவு முழுவதையும் சங்கச் செயற்குழுவே ஏற்றுக் கொள்ளுகிறது என்பதை இங்குக் குறிப்பிட விரும்

புகிறோம். சங்க நிதியிலிருந்து சிறிய அளவு தெ
செலவிற்காக எடுப்பதில்லை என்பதை உறுப்பின
விக்க விரும்புகிறோம்.

மதுரை மீனாட்சி அம்மை கோவிலைச் சுற்றியுள்ள இருப்புக்கம்பி வேலியையும் அழகிய மலர்ச் சோலைகளையும் அகற்றி விட்டுக் கடைகள் கட்டி வாடகைக்கு விடுவது என்ற திருப்பணிக் குழுவின் தீர்மானத்தை அறிந்து நம் சங்கச் செயற் குழுவில் வன்மையான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றித் தமிழக அமைச்சர்களுக்கும் அறநிலையத்துறையினருக்கும், மதுரைக் கோயில் ஆட்சிக் குழுவினருக்கும் அனுப்பியுள்ளோம். இந்து அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்களைக் குற்றாலத்தில் சந்தித்து நம் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளோம். சென்ற பல ஆண்டுகளுக்கு முன் ரூ. 25 லட்சம் செலவில், மொட்டைக் கோபுரத்தை முழுக் கோபுரமாக்கியும் வேறு இன்றியமையாத திருப்பணிகள் செய்தும் குடமுழுக்குச் செய்வித்த அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தாரே கோயிலைச் சுற்றியிருந்த குடும்பங்களைப் பல ஆயிரம் ரூபாய் கொடுத்து அப்புறப்படுத்திப் பெரும் பொருட் செலவில் மலர்ச் சோலையும் இருப்புக்கம்பி வேலியும் அமைத்தார்கள். அச்சமயத்தில் மதுரை நகராட்சித் தலைவராகவும் கலெக்டராகவும் இருந்த குரோல் துரையவர்கள் இந்த நந்தவனம் தொடர்ந்து இருந்துவரவேண்டும் என்றும் அதன் இடத்தை வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது என்றும் ஆணைபிறப்பித்திருக்கிறார்கள். கடைகள் கட்டும் கோயிலின் திட்டத்தை அரசினர் அனுமதிக்க மாட்டார்கள் என நம்புகிறோம்.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது வெளியிட்ட கெஜட் நூல்களில் கோவில் திருப்பணிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் செய்திகளை, இப்பொழுது வெளிவரும் கெஜட்டுகளில் சில மாற்றங்களுடன் வரலாற்றுக்குப் புறம்பான முறையிலும் உண்மையை மறைக்கத்தக்க நிலையிலும் வெளியிட்டு வருவதற்கு வருத்தம் தெரிவித்து முன்போன்றே செய்திகளைத் தெளிவாக வெளியிடுமாறு சங்கச் செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளோம்.

பர்மாவில் இந்திய நில உரிமையாளர்களின் நிலை குறித்தும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நட்ட ஈடு குறித்தும் தெளிவாக விளக்கி, அவர்களுக்கு ஆவன செய்யவேண்டி அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் திரு. காமராசருக்கும் வெளிநாட்டுத் துறைச் செயலாளருக்கும் பர்மாவில் உள்ள இந்தியத் தூதுவருக்கும் கடிதங்கள் எழுதியுள்ளோம். இது பற்றிக்கவனிப்பதாக இந்திய அரசிடமிருந்து விடைவந்திருக்கிறது.

பர்மாவில் கம்பைதனவைசியர் கல்விக்கழகத்தார் திருக்குறளைப் பர்மிய மொழியில் மொழி பெயர்க்கச் செய்து சென்ற 14—11—64ஆம் நாளன்று இந்தியத் தூதுவர் வைஸ்அட்மிரல் R. T. கட்டாரி அவர்களைக் கொண்டு வெளியிட்டுள்ளார்கள். இந்நூல் பர்மிய

வுக்கு உறுதுணையாக அமையும் என நம்புகிறோம். …ியர் கல்விக் கழகத்தாரின் இந்த நற்பணி மிகவும் …ரியது.

மலேசியாவில் 1—1—1948 இலிருந்து நடைமுறையில் இருந்து வரும் மலேயா வருமான வரிச்சட்டத்தின் 35-ஆவது பிரிவைத் திருத்த அந்த நாட்டு அரசாங்கம் எண்ணியுள்ளதை அறிந்து, அத்திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அந்நாட்டில் தங்கியிராமல் அங்கு வாணிகம் நடத்தும் தனிப்பட்டோர் 40% வருமானவரி செலுத்த நேரிடும். அதிலிருந்து எந்த வகையான விலக்கும் கிடைக்க வழியில்லை. அந்த நாட்டு நிதியமைச்சரின் பேச்சில், அந்நாட்டுடன் இரட்டை வரி விதிப்பு உடன்பாடு செய்துகொண்டுள்ள நாடுகளில் வாழ்ந்து அங்குத் தொழில் செய்பவர்களுக்கு இரட்டை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலால் மலேசியாவுடன் பேச்சு நடத்தி மேற்கண்ட உடன்பாடு செய்துகொள்ள வேண்டும் என இந்திய வெளிநாட்டு அமைச்சருக்கு எழுதியுள்ளோம். நம் பகுதியையும் மதுரையையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதுபற்றித் தெரிவித்துப் பாராளுமன்றத்தில் பேசுமாறு வேண்டியுள்ளோம்.

நம் வேண்டுகோளுக்கிணங்கத் தேவகோட்டை. ரஸ்தாவில் சென்னை அரசினர் ஏற்படுத்தியிருக்கும் தொழிற்பேட்டையில் நம்மவருள் இன்னும் பலர் இடம் பெற்றுப் பல தொழில்களை நடத்த வேண்டுகிறோம்.

மதுரை நகரவிடுதி நடு மன்றத்தில் மின் விசிறிகள் பொருத்தியுள்ளோம். இங்கு வந்து தங்குபவர்கள் படித்துப் பயன்பெறும் வண்ணம் நூலகம் ஒன்றும் அமைத்துள்ளோம். இந்நூலகத்திற்கு மதுரை மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் திரு. செ. செல்லப்பன் அவர்கள் 101 அரிய நூல்கள் தந்துதவியுள்ளார்கள். இவர்கள் போல் நம் குலப் பதிப்பாளர்கள் பிறரும் தமது பதிப்புக்களை நம் நூலகத்திற்குத் தந்துதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நகராட்சிக் குடிநீர்க் குழாய் நம் நகர விடுதியில் இல்லை என்ற குறையும் நாம் ஆறு ஏழு ஆண்டுகளாக இடைவிடாது முயன்றதால் நீங்கிவிட்டது.

நம் குலத்தார் வாழ்ந்து வரும் ஊர்களில் அவ்வப்போது நல்ல அறச் செயல்களைச் செய்து வருகிறார்கள். சென்னை இந்தியா லெதர் கார்ப்பரேஷன் நிருவாக இயக்குநர் மேலைச் சிவபுரி திரு. ஆ. நாகப்பச் செட்டியார் அவர்கள் தோல் தொழில் வளர்ச்சிக்காக ரூ. 116000 தம் சொந்த நிதியிலிருந்து நன்கொடை வழங்கியுள்ளது மிகவும் போற்றற்குரியது.

தேவகோட்டைத் திருவள்ளுவர் கழகத்திற்கு உலகப் பொது மறையாம் திருக்குறள் இன்னும் பரவும் பொருட்டு மதுரை மீனாட்சி

ஆலே இயக்குநர் திரு. கருமுத்து தி. சுந்தரம் செட்
வெள்ளிச் சுழற்கோப்பையும் கோவை சோமசுந்தர
திரு. P. S. S. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் ரூ.
கியுள்ளார்கள்.

தேவகோட்டை அ. ராம. அ. லெ. அருணுசலஞ் செட்டியார் அவர்கள் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆண்டுதோறும் சீருடை வழங்கி வருகிறுர்கள். விரையாச்சிலே மு. பழ. பழனியப்ப செட்டியார் நினைவாக அவர்கள் குடும்பத்தார் 350 பிள்ளைகளுக்கு 5—8—64ல் சீருடை வழங்கினுர்கள். அவர்களுக்கு நம் குலத்தின் சார்பில் நன்றி உரியது.

மதுரை விசயா அச்சுக்கூட உரிமையாளர் திரு. K. இராமன் அவர்கள் எவ்வாண்டும் போல் இவ்வாண்டும் நம் சங்க, விடுதித் தொடர்பான அச்சுவேலைகளை ஊதியம் எதுவும் கருதாது உடனுக்குடன் செவ்வன் நிறைவேற்றியுதவி வருகிறுர்கள். அவர்களின் அன்பிற்கும் ஆர்வத்திற்கும் தொண்டுள்ளத்திற்கும் என்றும் கடப்பாடு உடையோம்.

நம் சங்க வளர்ச்சியைப் பெரிதும் விரும்பி மலேயாவில் மிகுதியான வாழ்நாள் உறுப்பினர்களையும் உறுப்பினர்களையும் புதிதாகச் சேர்த்து அனுப்பியும் பழைய சந்தாக்களைப் புதுப்பித்துத் தந்தும் வருகின்ற தேவகோட்டை மு. நா. சுப. சுப்பிரமணியன் செட்டியார், சோம. அருணுசலம் செட்டியார், சு. லெ. லக்ஷ்மணன் செட்டியார், வெ. நா. சி. இராமநாதன் செட்டியார், ஓ. சிறுவயல் நா. இராம. நாராயணன் செட்டியார், சண்முகநாதபுரம் கரு. இராம. நா. இராமநாதன் செட்டியார் ஆகியோருக்கும் இவர்களைப் போல் சந்தாச் சேர்த்துதவி வரும் பிற அன்பர்களுக்கும் நம் நன்றி உரியதாகும்.

சங்க வளர்ச்சி பற்றிய மகிழ்ச்சியான செய்திகளுக்கிடையே துயரம் தோய்ந்த சில செய்திகளையும் தெரிவிக்க வேண்டியவராகிறோம். நம் சங்கத்தின் உதவித் தொகை பெற்றுப் பொறியியற் கல்லூரியில் பயின்று வந்த குளிபிறை A. நாகப்பனும், நெற்குப்பை PR. குமரப்பனும், மருத்துவக் கல்லூரியில் பயின்று வந்த கல்லல் லெ. நடராசனும் எதிர்பாராத இறப்படைந்தமை குறித்து ஆருத் துயரடைகிறோம். அவர்கள் ஆன்மா அமைதியுறும் பொருட்டு இறைவனை இறைஞ்சுகின்றோம். அவர்களை இழந்து வருந்தும் குடும்பத்தார்களுக்கு நம் சங்கத்தின் ஆழ்ந்த இரங்கலுணர்வைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சென்ற 27—5—'64உயன்று இந்தியத் தலைமை அமைச்சர் பண்டித சவகர்லால் நேரு இயற்கை யெய்தியது குறித்து இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளோம்.

நம் குலத்துக்குரிய 9 கோவில்களின் புள்ளி விவரத்தைப் புதிதாகச் சேர்த்துப் பிறிதொரு பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். அத்

நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் உள்ள மொத்தப் வரத்தையும் வெளியிட்டிருக்கிறோம்.

உயர் பதவியில் உள்ளவர்கள், தொழில் துறைப் பட்டம் பெற்றவர்கள் ஆகியோரின் பெயர்களை எங்களுக்குச் செய்தி கிடைத்தது வரை வெளியிட்டுள்ளோம். மேலும் இவை தொடர்பாகச் செய்தி தெரிந்தவர்கள் எங்களுக்குத் தெரிவித்தால் நன்றியுடன் ஏற்று அடுத்த ஆண்டுவிழா அறிக்கையில் வெளியிடுவோம்.

நம் குலத்தினர் வட இந்தியாவில் நம்மவர்களுக்காக நிறுவியுள்ள விடுதிகளின் முகவரிகளையும் பிறிதொரு பக்கத்தில் சேர்த்துள்ளோம்.

நமது சங்கத்தின் வளர்ச்சிக்காக நன்கொடை வழங்கியவர்களுக்கும், உறுப்பினர்களைச் சேர்த்து உதவியவர்களுக்கும், நமது வேண்டுகோளுக்கிணங்கிப் பலருக்கு வேலை தந்து உதவிய தொழில் நிலைய அதிபர்கட்கும், இதழ்களை அன்பளிப்பாக அனுப்பி வரும் 'தமிழ்நாடு', 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' நிருவாகத்தினருக்கும் சங்கத்தின் செய்திகளைச் சிறப்பாக அவ்வப்போது வெளியிட்டு உதவிய 'தமிழ்நாடு' ஆசிரியர் திரு. கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் B. A. அவர்கட்கும், சங்கத்தின் வரவு செலவுக் கணக்குக்களைத் தணிக்கை செய்த திரு. பெரி. தியாகராஜ், திரு. RM. சபாரத்தினம் அவர்கட்கும், நிதி வசூல் குழுவினருக்கும், செயற்குழு உறுப்பினர்கட்கும், சங்க வளர்ச்சியில் ஆர்வங் காட்டி வரும் அன்பர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அன்புள்ள,

ஆவி. க. மெ. அரு.
தியாகராசன் செட்டியார்
சுப. அண்ணாமலை
செயலர்.

மதுரை,
25-11-64

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித்தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 800	1958—59 1959—60 1960—61 1961—62	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	ரூ 200
ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ 200	ரூ 200
ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ 200	ரூ 200
ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ 200	ரூ 200
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 400	1958—59 1959—60	ரூ 200 ரூ 200	ரூ 400
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1958—59 1959—60 1960—61	ரூ 200 ரூ 200 ரூ 200	ரூ 400
ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ 200	ரூ 200
ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ 200	ரூ 200
ஆண்டு 1க்கு ரூ. 200	1958—59	ரூ 200	ரூ 200

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
18	AR. லெட்சுமணன் S/o RM. AR. L. அருணாசலம் செட்டியார்	இராயவரம்	B. Com. (Hons.)
19	லெ. கண்ணப்பன் S/o PL. லெட்சுமணன் செட்டியார்	காளையார்மங்கலம்	ஆசிரியர் பயிற்சி
20	லெ. நடராஜன் S/o வயி. லெட்சுமணன் செட்டியார், கரு. வயி வீடு,	கல்லல்	G. C. I. M.
21	பழ. இராமநாதன் S/o சுப. பழனியப்ப செட்டியார், பழ. சுப. வீடு	வேகுப்பட்டி	பொறியியல்
22	M. கதிரேசன் S/o K. M. முத்தையா செட்டியார் A. K. M. M. வீடு	பூலாங்குறிச்சி	பொறியியல்
23	PR. S. L. சோமசுந்தரம் S/o P.R.S L. லெட்சுமணன் செட்டியார், கள்ளிக் கோட்டை சோம. தெரு	தேவகோட்டை	பொறியியல்
24	AV. கண்ணப்பன் S/o A. R. ஆவிச்சி செட்டியார் 3/57, மெயின் தெரு	நாட்டரசன்கோட்டை	பொறியியல்
25	L. நாராயணன் S/o N. L. லெட்சுமணன் செட்டியார் No. 2 ரோடு	வலையப்பட்டி	பொறியியல்
26	PR. சேது S/o SM. PR. பெரிய கருப்பன் செட்டியார்	நெற்குப்பை	பொறியியல்

ı) திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
1	S. தியாகராஜன் S/o RM. S. சீனிவாசன் செட்டியார்	கண்டவராயன்பட்டி	ஆசிரியர் பயிற்சி
2	SP. பர்வதவர்த்தினி D/o N. SM. SP. சுப்பிரமணியன் செட்டியார்	காடத்தான்பட்டி	M. B. B. S. Senieor House Surgeoncy
3	SM. முத்துக்கருப்பன் S/o கு. சோமசுந்தரம் செட்டியார் 1, தொண்டியார் வீதி	தேவகோட்டை	பொறியியல்
4	கரு. குப்பான் S/o RM. S. RM. கருப்பையா செட்டியார் 70, RM. S. தெரு	நெற்குப்பை	பொறியியல்
5	SP. சுப்பிரமணியன் S/o PL. சுப்பிரமணியன் செட்டியார், பழனிகோவில் தெரு	நெற்குப்பை	L. C. E. பிரிவு
6	S. மீனாட்சிசுந்தரம் S/o N. N. சாத்தப்ப செட்டியார்	கல்லல்	பொறியியல்
7	லெ. காந்திமதி D/o வயி லெட்சுமணன் செட்டியார், கரு. வயி. வீடு	கல்லல்	G. C. I. M.
8	S. முத்துச்செல்லப்பன் S/o A. M. A. சடையப்ப செட்டியார்	அரிமளம்	பொறியியல்

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித் தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1-க்கு ரூ. 500	1956—57	ரூ 500	ரூ 500
ஆண்டு 1-க்கு ரூ 720 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 2160	1957—58 1958—59 1959—60	ரூ 718 ரூ 720 ரூ 722	— — —
ஆண்டு 1க்கு ரூ. 1000	1963	ரூ 1000	ரூ 500
ஆண்டு 1-க்கு ரூ. 400 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 1600	1957—58 1958—59 1959—60 1960—61	ரூ 400 ரூ 400 ரூ 400 ரூ 400	ரூ 1000 — — —
ஆண்டு 1-க்கு ரூ. 200	1956—57	ரூ 200	ரூ 200
ஆண்டு 1-க்கு ரூ. 250 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 500	1957—58 1958—59	ரூ 250 ரூ 250	— — ரூ 500
ஆண்டு 1-க்கு ரூ. 200 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 1000	1957—58 1958—59 1959—60 1960—61 1961—62	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	— —
ஆண்டு 1-க்கு ரூ. 270 வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 540	1958—59 1959—60	ரூ 270 ரூ 270	—
ஆண்டு 1-க்கு ரூ. 200 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 800	1958—59 1959—60 1960—61 1961—62	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	ரூ 400

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
9	A. சுத்தானந்தன் S/o AR. அண்ணமலை செட்டியார்	கடியாபட்டி	பொறியியல்
10	நாக. அண்ணமலை S/o RM. நாகப்ப செட்டியார்	சண்முகநாதபுரம்	பொறியியல்
11	PL வள்ளியப்பன் S/o ஆ. ப. அரு. பழனியப்ப செட்டியார்	கோனபட்டு	பொறியியல்
12	VR. சொக்கலிங்கம் S/o SV. RM. வீரப்ப செட்டியார்	புதுவயல்	பொறியியல்
13	N. ராஜரத்தினம் S/o SP. KN. நாச்சியப்ப செட்டியார் வெளியாரியார் வீடு	கல்லல்	பொறியியல்
14	S. S. லட்சுமணன் S/o A. S. S. S. சோலையப்ப செட்டியார்	பள்ளத்தூர்	பொறியியல்
15	V. இரத்தினம் S/o A. N. R. வீரப்ப செட்டியார்	செம்பனூர்	L. C. E.
16	பெரி. கதிரேசன் S/o உல. பெரி. மு. பெரியணன் செட்டியார்	வலையபட்டி	B. Sc., (Hons)
17	மு. சிவானந்தம் S/o AL. M முத்துராமன் செட்டியார்	வேந்தன்பட்டி	B. Com , (Hons.)

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித்தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 400	1958—59 1959—60	ரூ 200 ரூ 200	ரூ 400
ஆண்டு 1க்கு ரூ. 150	1958—59	ரூ 150	ரூ 150
ஆண்டு 1க்கு ரூ 270	1959—60	ரூ 270	--
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 4 ஆணடுகளுக்கு ரூ. 800	1959—60 1960—61 1961—62 1962—63	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ. 800	1959—60 1960—61 1961—62 1962—63	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 400	1960—61 1961—62	ரூ 200 ரூ 200	ரூ 50
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ 600	1959—60 1960—61 1961—62	ரூ 200 ரூ 200 ரூ 200	ரூ 350
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் நான்கு ஆண்டு களுக்கு ரூ 800	1959—60 1960—61 1961—62 1962—63	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ. 800	1959—60 1960—61 1961—62 1962—63	ரூ 200 ரூ 200 ரூ 200 ரூ 200	—

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
27	SP. மீனுக்ஷிசுந்தரம் S/o SP. RM. சுப்பிரமணியன் செட்டியார் மாங்குடியார் வீடு நா. அ தெரு	தேவகோட்டை	B. Sc., (Statistics)
28	பெரி. கற்பகக்கணபதி S/o ஆ. பெரி. பெரிய கருப்பஞ் செட்டியார்	நச்சாந்துபட்டி	M. Sc.
29	SP. மெய்யப்பன் S/o VR. AS. SP. சுப்பிரமணியன் செட்டியார்	கீழப்பட்டமங்கலம்	L. C. E.
30	S. அழகப்பன் S/o கரு. உ. கரு. சேக்கப்ப செட்டியார்	கல்லல்	L. C. E.
31	RM. கணேசன் S/o S T. N. RM. இராமசாமி செட்டியார்	கல்லல்	L. M. E.
32	லெ. நாகப்பன் 66, வெ. ஊரணி மேலவிதி	தேவகோட்டை	L. C. E. நிலவியல்
33	ந. சீனிவாசன் S/o KR. A. முத்து நடராசன் செட்டியார்	ஆ. தெக்கூர்	B. A. (Hons.)
34	C. உண்ணுமலை D/o இராம. சிதம்பரம் செட்டியார் ரெங்கண்ணு தெரு	தேவகோட்டை	ஆசிரியர் பயிற்சி

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித்தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 200	—
ரூ. 200 விதம்	1960—61	ரூ 200	—
மூன்று ஆண்டுகளுக்கு	1961—62	ரூ 200	—
ரு 600			
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 200	ரூ 400
ரூ. 200 விதம்	1960—61	ரூ 200	
2 ஆண்டுகளுக்கு			
ரூ, 400			
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 150	ரூ 150
ரூ. 150 விதம்	1960—61	ரூ 150	
3 ஆண்டுகளுக்கு	1961—62	ரூ 150	
ரூ. 450			
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 150	—
ரூ. 150 விதம்	1961—62	ரூ 150	
3 ஆண்டுகளுக்கு	1962—63	ரூ 150	
ரூ, 450			
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 150	—
ரூ. 150 விதம்	1961—62	ரூ 150	
3 ஆண்டுகளுக்கு	1962—63	ரூ 150	
ரூ. 450			
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 150	ரூ 150
ரூ. 150			
ஆண்டு 1க்கு	1959 - 60	ரூ 150	ரூ 150
ரூ. 150			
ஆண்டு 1க்கு	1959—60	ரூ 100	ரூ 200
ரூ. 100 விதம்	1960—61	ரூ 100	
2 ஆண்டுகளுக்கு			
ரூ 200			

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
35	C. சொர்ணவல்லி D/o இராம. சிதம்பரம் செட்டியார் ரெங்கண்ணு தெரு	தேவகோட்டை	ஆசிரியர் பயிற்சி
36	K. நாகப்பன் B. E. (Hons)	அரிமளம்	Master's degree in Ele. Engg. (U.S.A) செல்லப் பிரயாணச் செலவு மட்டும்
37	S. வைத்தியநாதன் M. Sc. 1, தொண்டியார் தெரு	தேவகோட்டை	M. Sc.,
38	A. M. வள்ளியப்பன் S/o அ. மு. முத்தையா செட்டியார்	கண்டரமாணிக்கம்	Engineering Diploma Course
39	சுப. விசாலாட்சி D/o மு. வ. சொ. சுப. சுப்பிரமணியன்செட்டியார் காலி அழகப்ப செட்டியார் தெரு	தேவகோட்டை	ஆசிரியர் பயிற்சி
40	A. லெட்சுமணன்	பொன். புதுப்பட்டி	L. M. E.
41	N. நல்லப்பன் S/o அரு. நா. நல்லப்ப செட்டியார்	கல்லல்	Mechanical Engineering
42	N. மீனாள் D/o அரு நா. நல்லப்ப செட்டியார்	கல்லல்	ஆசிரியர் பயிற்சி

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித்தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித்தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ 100 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 200	1959—60 1960—61	ரூ 100 ரூ 100	ரூ 200
ரூ. 1200	1960—61	ரூ 1200	ரூ 1200
ஆண்டு ஒன்றுக்கு ரூ 250 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 500	1960—61 1961—62	ரூ 250 ரூ 250	ரூ 350
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 3 ஆண்டுகளுக்கு ரூ 600	1960—61 1961—62 1962—63	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 300	1960—61 1961—62	ரூ 150 ரூ 150	ரூ 150
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ. 400	1960—61 1961—62	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 3 ஆண்டுகளுக்கு ரூ. 600	1960—61 1961—62 1962—63	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 300	1959—60 1960—61	ரூ 150 ரூ 150	ரூ 250

திரும்பப் பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
43	P. சிவப்பிரகாசம் S/o சொ. பனையப்ப செட்டியார் "கணேச நிவாஸ்"	மேலச்சிவபுரி	B. Pharmacy
44	SP. ராஜமாணிக்கம் கரு. லெ. சுப. இல்லம்	மதகுபட்டி	Mechanical Engineering
45	பழ. சொக்கலிங்கம் S/o சுப, பழனியப்ப செட்டியார்	வேகுப்பட்டி	L. T. M.
46	S. நாகப்பன் S/o பி. ஆ. மு. சேது ராமன் செட்டியார் பாலமேட்டுத் தெரு	வலையபட்டி	M. B. B. S.
47	லெ. காந்திமதி	கல்லல்	M. B. B. S.
48	லெ. நடராசன்	கல்லல்	M. B. B. S.
49	KM. குமரப்பன் S/o மு. கு. மு குமரப்ப செட்டியார் ப. ராம. ப. தெரு	பள்ளத்தூர்	பொறியியல்
50	K. L. வள்ளியப்பன் S/o சு குழ. குழந்தையன் செட்டியார் 2/21, முதல் வீதி சொக்கலிங்கபுரம்	இராயவரம்	பொறியியல்
51	AL. சுப்பையா S/o SP. அழகப்ப செட்டியார்	ஒ. சிறுவயல்	பொறியியல்

(Returnable Scholarship) ...ம்

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித் தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 4 ஆண்டு களுக்கு ரூ 800	1960—61 1961—62 1962—63 1963—64	ரூ. 200 ரூ. 200 ரூ. 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 3 ஆண்டு களுக்கு ரூ. 600	1960—61 1962—63 1963—64	ரூ. 200 ரூ 200 ரூ. 200	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ 400	1960—61 1961—62	ரூ. 200 ரூ. 200	— ரூ. 200
ஆண்டு 1க்கு ரூ. 330 வீதம் 4 ஆண்டு களுக்கு ரூ. 1320	1961—62 1962—63 1963—64	ரூ. 330 ரூ 330 ரூ. 330	—
ஆண்டு 1க்கு ரூ 330 வீதம் 3 ஆண்டு களுக்கு ரூ. 990	1961—62 1962—63 1963—64	ரூ 330 ரூ 330 ரூ. 330	—
ஆண்டு 1க்கு ரூ. 330 வீதம் 3 ஆண்டு களுக்கு ரூ 990	1961—62 1962—63	ரூ. 330 ரூ. 330	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் 5 ஆண்டு களுக்கு ரூ. 1000	1961—62 1962—63 1963—64	ரூ. 200 ரூ 200 ரூ. 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 5 ஆண்டு களுக்கு ரூ. 1000	1961—62 1962—63 1963—64	ரூ. 200 ரூ. 200 ரூ. 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 5 ஆண்டு களுக்கு ரூ 1000	1961—62 1963—64	ரூ. 200 ரூ 200	—

திருப்பப் பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
52	அ. நாகப்பன் பொ. நா. ராம. இல்லம் சேக்கான் செட்டியார் தெரு	குழிபிறை	பொறியியல்
53	KR. இராமநாதன் அழ. சு. இல்லம் 24, வயி வீர. தெரு	காரைக்குடி	பொறியியல்
54	இராம. திருநாவுக்கரசு S/o சித பெ. ராம. ராமசாமி செட்டியார்	குழிபிறை	பொறியியல்
55	PR. கதிரேசன் B. Sc. (Hons) S/o உல. பெரி. மு. பெரியணன் செட்டியார்	வலையபட்டி.	M. Sc.
56	KN. சோமசுந்தரம் ராம. அ. அ. சிவ. வீடு	பாகனேரி	M. Sc.
57	AR. அருணாசலம் S/o அ. மு. அ. அருணா சலம் செட்டியார்	பள்ளத்தூர்	M. Sc.
58	KN. சிவலீலா D/o ஆவி. கண. ராம. கண்ணப்ப செட்டியார் 79, வீரகண்டான் தெரு	நாட்டரசன் கோட்டை	B. Sc.
59	R. வள்ளி D/o வீ. கதிரேச இராம நாதன் செட்டியார்	கீழச்சிவற்பட்டி	M. A.
60	அரு. கனகசபை 13, ந பழ ந தெரு	நெற்குப்பை	L. M, E.

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித்தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித் தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ 800	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 800	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 400	1961 - 62	ரூ 400	ரூ 400
ஆண்டு 1க்கு ரூ. 300 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62 1962—63	ரூ 300 ரூ 300	ரூ 70
ஆண்டு 1க்கு ரூ. 300	1961—62	ரூ 300	—
ஆண்டு 1க்கு ரூ. 300	1961—62	ரூ 300	—
ஆண்டு 1க்கு ரூ. 300 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 600	1961—62 1962—63	ரூ 300 ரூ 300	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டுகளுக்கு ரூ. 400	1961—62 1962—63	ரூ 200 ரூ 200	—

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
61	கரு. பெ. சே. பெருமாள்	பூலாங்குறிச்சி	L. C. E.
62	RM. சொக்கலிங்கம் S/o மு. விர. இராமநாதன் செட்டியார்	பொ. புதுப்பட்டி	Civil Engineering
63	AR. மாணிக்கம் லெ. அரு. வீடு. சொக்கலிங்கபுரம்	இராயவரம்	L. M. E.
64	KR. நாராயணன் "வள்ளுவர் இல்லம்"	அலவாக்கோட்டை	L. C. E.
65	அ. மு. வீரப்பன் S/o அ. மு. முத்தையா செட்டியார்	கண்டரமாணிக்கம்	Civil Engineering
66	N. அண்ணாமலை S/o வெ. நா. வெ. நாகப்ப செட்டியார் 66, வெ. ஊரணி மேற்கு	தேவகோட்டை	பொறியியல்
67	MR. நாராயணன் S/o முரு. செ. முரு. முருகப்ப செட்டியார் M. V. C. தெரு	பள்ளத்தூர்	பொறியியல்
68	N. வீரப்பன் S/o இராம. நா நாராயணன் செட்டியார், 'மேலவீடு'	அரியக்குடி	பொறியியல்
69	TR. இராமநாதன் S/o PR திருநாவுக்கரசு செட்டியார் செப்பவயலார் தெரு	தேவகோட்டை	பொறியியல்

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித் தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1961—6 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ, 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு 600	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1961—62 1962—63 1963—64	ரூ 200 ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	1962—63	ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ 200 வீதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	1962—63	ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் ஐந்து ஆண்டு களுக்கு ரூ. 1000	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
70	SP. சொக்கலிங்கம் S/o வி. சொ. சுப்பையா செட்டியார்	பூலாங்குறிச்சி	பொறியியல்
71	PR. குமரப்பன் S/o பழ. பெரி. பெரி. பெரியகருப்பஞ்செட்டியார் 12. பழ. பெரி. தெரு	நெற்குப்பை	பொறியியல்
72	N. லட்சுமணன் S/o குப. அ. நா. ச. நாராயணன் செட்டியார்	நாட்டரசன்கோட்டை	பொறியியல்
73	P. தியாகராஜன் S/o பெரி. பெரி. பெரியகருப்பஞ்செட்டியார்	இராங்கியம்	பொறியியல்
74	C. சொக்கலிங்கம் S/o S. S. AR. சொக்கலிங்கம் செட்டியார்	கானாடுகாத்தான்	L. M. E.
75	RM. தியாகராஜன் S/o M. இராமநாதன் செட்டியார் சி. பெரி. மு. ராம. வீடு	வேகுப்பட்டி	L. T. M.
76	N. நாச்சியப்பன் S/o நா. பழ. நா. நாராயணன் செட்டியார்	கண்டரமாணிக்கம்	L. T. M.
77	RM. அருணாசலம் M. A., M. Litt. துணைப்பேராசிரியர் தியாகராசர் கல்லூரி, மதுரை	அரிமளம்	Ph. D.
78	AL. சிதம்பரம் S/o தா. கரு. சித. கரு. அழகப்ப செட்டியார்	கானாடுகாத்தான்	M. Com.

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித் தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ 600	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 600	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ 400	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ 400	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ. 450	1962—63	ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ 450	1962—63 1963—64	ரூ 150 ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ. 300	1962—63 1963—64	ரூ 150 ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 1250	1962—63	ரூ 1250	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் : ஆண்டு களுக்கு ரூ. 400	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—

திரும்பப்பெறும் உதவிச் சம்பளம்

பெற்றவர்களின்

எண்	மாணவர் பெயர்	ஊர்	கல்வித்துறை
79	SP. முருகப்பன் S/o M. S. S. P. சுப்பையா செட்டியார், சிவல்பட்டியார் வீடு புகையிலைக் கருப்பஞ் செட்டியார் தெரு	தேவகோட்டை	M. Sc. Statisties
80	K. L. முத்து S/o சு. குழ. குழந்தையன் செட்டியார், 2/21. முதல் வீதி, சொக்கலிங்கபுரம்	இராயவரம்	M. Sc., (Chemistry)
81	N. வெங்கடாசலம் S/o சிவ. லெ. நா. நாராயணன் செட்டியார், சிவ. லெ. நா. இல்லம்	அலவாக்கோட்டை	B. Sc., (Chemistry)
82	AL. வெங்கடாசலம் S/o அழகப்ப செட்டியார் 2வது தெரு	மதகுபட்டி	"
83	L. சரஸ்வதி D/o பழ. லெட்சுமணன் செட்டியார். பாரதி தெரு	தேவகோட்டை	Preparatory Course
84	V. பெத்தாள் D/o L. V. உமையாள் ஆச்சி 11, க. வீர. ராம. தெரு	தேவகோட்டை	ஆசிரியைப் பயிற்சி
85	சுப. அண்ணாமலை	தேவகோட்டை	கிழக்கு ஜெர்மனி செல்லப் பயணச் செலவு
86	PL. இராமசாமி	கோனாபட்டு	Ph. D. படிப்பிற்கு அமெரிக்கா செல்லப் பயணச் செலவு
87	SP. மீனாட்சி	தேவகோட்டை	தையற்பயிற்சி

(Returnable Scholarship)

பட்டியல்

வாக்களிக்கப்பெற்ற உதவித் தொகை	கல்வி ஆண்டு	கொடுக்கப்பெற்ற உதவித்தொகை	திரும்பப்பெற்ற தொகை
ஆண்டு 1க்கு ரூ. 400	1962—63	ரூ 400	—
ஆண்டு 1க்கு ரூ. 200 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ. 400	1962—63 1963—64	ரூ 200 ரூ 200	—
ஆண்டு 1க்கு ரூ 150 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ. 300	1962—63 1963—64	ரூ 150 ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ. 300	1962—63 1963—64	ரூ 150 ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் மூன்று ஆண்டு களுக்கு ரூ 450	1962—63 1963—64	ரூ 150 ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 150 வீதம் 2 ஆண்டு களுக்கு ரூ. 300	1962—63 1963—64	ரூ 150 ரூ 150	—
ஆண்டு 1க்கு ரூ. 1250	1963	ரூ 1250	ரூ 700
ஆண்டு 1க்கு ரூ. 1000	1963	ரூ 1000	—
ஆண்டு 1க்கு ரூ. 100	1963–64	ரூ 100	—

31—12—63வரை

இதுவரை மொத்தம் வாக்களிப்பெற்ற தொகை ரூ.	52520
இதுவரை மொத்தம் கொடுக்கப்பெற்ற தொகை ரூ	46260
இனிக் கொடுக்கவேண்டிய தொகை ரூ.	6260

இவ்வாண்டில் மட்டும் கொடுத்த தொகை	ரூ. 9110	
இவ்வாண்டில் மட்டும் திரும்பப்பெற்ற தொகை ரூ.	5590	
இதுவரை மொத்தம் திரும்பப்பெற்ற தொகை ரூ.		10820
இன்னும் திரும்பவரவேண்டிய தொகை ரூ.		35440
		ரூ. 46260

நன்கொடை தந்துதவியவர்களின் விபரம்

திரு. கருமுத்து. தியாகராஜன் செட்டியார்,
ஆ. தெக்கூர் ரூ. 6001

திரு. இராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார்
கானாடுகாத்தான் ரூ. 5000

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்,
கண்டரமாணிக்கம் ரூ. 1500

திரு. லெ. நாராயணன் செட்டியார்
கண்டரமாணிக்கம் ரூ. 1500

திரு. **P. S. S.** சோமசுந்தரம் செட்டியார்,
தேவகோட்டை ரூ. 1501

திரு. கும. நா. சுப நா. மாணிக்கம் செட்டியார்
செம்பனூர் ரூ. 1151

திரு. **KV. RM.** மாணிக்கம் செட்டியார்,
கண்டவராயன்பட்டி ரூ. 1001

திரு. **V. S.** சிவலிங்கம் செட்டியார், பூலாங்குரிச்சி ரூ. 1001

திரு. வ. ராம. வள்ளியப்ப செட்டியார்
பூலாங்குரிச்சி ரூ. 1001

திரு. **O. A. PR. M.** சாரிட்டீஸ் டிரஸ்ட்,
பள்ளத்தூர் ரூ. 1001

திரு. அ. மு. மு. முருகப்ப செட்டியார்,
பள்ளத்தூர் ரூ. 1000

திரு. உ. ராம. மெ. சுப. சேவு. குடும்பத்தார் ரூ. 1000

திரு. உ. ராம. மெ. சுப. சேவு. அண.
அண்ணாமலை செட்டியார், தேவகோட்டை ரூ. 1000

திரு. ராம. ப. ராம. ப. வள்ளியப்ப செட்டியார்,
பூலாங்குரிச்சி ரூ. 701

திரு. சி. க அரு. க. அரு. சோமசுந்தரம்
செட்டியார், ஒக்கூர் ரூ. 701

திரு. அரு. நா. நாராயணன் செட்டியார்,
கோட்டையூர் ரூ. 701

திரு. பழ. கண்ணப்ப செட்டியார்,
தேவகோட்டை ரூ. 666

திரு. **V. KN.** கண்ணப்ப செட்டியார்
நாட்டரசன்கோட்டை ரூ. 501

திரு. பழனியப்பா & Co., மதுரை ரூ. 501

திரு. **SP. A.** இராமநாதன் & பிரதர்ஸ். மதுரை ரூ. 501
சௌத் இந்தியா கார்ப்பரேஷன், கோவை ரூ. 501

ஜவஹர் மில்ஸ், சேலம் ரூ. 501
திரு. PR. உடையப்பன், மதுரை
கமர்ஷியல் ஏஜன்ஸீஸ் ரூ. 501
திரு. ராம. வீர. ராம. இராமசாமி செட்டியார்
காரைக்குடி ரூ. 500
திரு. AL. சிங்காரம் செட்டியார்,
கண்டவராயன்பட்டி ரூ. 500
திரு. ஆவி. க. இராமநாதன் செட்டியார்,
தேவகோட்டை ரூ. 401
திரு. உ. வீர. சேவு. அரு. அருணசலம்
செட்டியார், சண்முகநாதபுரம் ரூ. 401
திரு. பெ. சித. லெ. லெட்சுமணன் செட்டியார்
சண்முகநாதபுரம் ரூ. 401
திரு. டாக்டர் S. சண்முகம் செட்டியார்,
பொ. புதுப்பட்டி ரூ. 351
திரு. இராம. ஆறு. சுப்பிரமணியன் செட்டியார்.
கண்டரமாணிக்கம் ரூ. 301
திரு. நா. சுப. காசிவிஸ்வநாதன் செட்டியார்
செம்பனூர் ரூ. 301
திரு. RM. L. RM. L. லக்ஷ்மணன் செட்டியார்,
தேவகோட்டை ரூ. 301
திரு. நா. அ. ராம கா. இராமநாதன் செட்டியார்,
கண்டனூர் ரூ. 251
திரு. மெ. வ. வ. வள்ளியப்ப செட்டியார்,
தேவகோட்டை ரூ. 251
திரு. வயி.நா.வயி. வயிரவன் செட்டியார், கல்லல் ரூ. 251
திரு. நா. சுப. ராம. இராமநாதன் செட்டியார்,
உலகம்பட்டி ரூ. 251
லோட்டஸ் மில்ஸ் கோவை ரூ. 251
திரு. பழ. கண்ணப்ப செட்டியார் கம்பெனி,
மதுரை ரூ. 251
திரு. நா. சுப. நா. நாகப்ப செட்டியார் சன்ஸ்,
மதுரை ரூ. 251
திரு. தெ. நா. சொக்கலிங்கம் செட்டியார்,
இராயவரம் ரூ. 251
திரு. மெ. சு. உ. சுப. வே. வேலாயுதஞ்செட்டியார்,
சொக்கநாதபுரம் ரூ. 250
திரு. மாணிக்கம் & Co., மதுரை ரூ. 171
திரு. நா. சுப. நாகப்ப செட்டியார், வேந்தன்பட்டி ரூ. 151
திரு. T. PL. அழகப்பசெட்டியார், வேந்தன்பட்டி ரூ. 150

திரு. அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார்	தேவகோட்டை	ரூ.	101
திரு. K. பழனியப்பசெட்டியார், தேவகோட்டை		ரூ.	101
திரு. பழ. லெ. இராமநாதன் செட்டியார்,	வலையபட்டி	ரூ.	101
திரு. இராம. அரு. அரு. இராம.	எஸ்டேட் ட்ரஸ்ட், தேவகோட்டை	ரூ.	101
திரு. அரு. அ. சுப. அண்ணாமலை செட்டியார்,	வேந்தன்பட்டி	ரூ.	101
திரு. சி. க. கரு. கண. இராமநாதன் செட்டியார்,	ஒக்கூர்	ரூ.	51
திரு. சி. மு. மு. பழ பழனியப்ப செட்டியார்,	பனையப்பட்டி	ரூ.	51
திரு. மு. மகாலிங்கம் செட்டியார், பனையப்பட்டி		ரூ.	21
திரு. SP. வைரவன், இராயவரம்		ரூ.	25
திரு. சுப. சி. சு சின்னக்கருப்பன் செட்டியார்	P. புதுப்பட்டி	ரூ.	16
திரு. T. தேனப்ப செட்டியார், குளிபிறை		ரூ.	11
திரு. சுப. அண்ணாமலை, தேவகோட்டை		ரூ.	11
திரு. RM. சுந்தரேசன், தேவகோட்டை		ரூ.	11
திரு. செ. செல்லப்பன், அரிமளம்		ரூ.	11
திரு. RM. முத்தப்ப செட்டியார். கழனிவாசல்		ரூ.	11
	ஆக	ரூ.	36343

நம் சங்கத்திற்குப் புதுமை, திருமணம், சாந்தி மகமை தந்துதவியர்களின் விவரம்.

1	திரு. கருமுத்து தி. சுந்தரம் செட்டியார், ஆ. தெக்கூர்	(2—3—61)	ரூ.	101
2.	„ „ „	(14—12—61)	ரூ.	101
3.	„ „ „	(8—7—63)	ரூ.	101
4.	„ AL. மாணிக்கம் செட்டியார் „		ரூ.	16
5.	„ AL. சீனிவாசன் செட்டியார் „		ரூ.	11
6.	„ S. அழகு சுந்தரம் செட்டியார் „		ரூ.	11
7.	„ AL. சிங்காரம் செட்டியார், கண்டவராயன்பட்டி	(20—4—61)	ரூ.	101
8	„ „ „	(27—11—61)	ரூ.	11
9	„ KV. RM. மாணிக்கம் செட்டியார்,		ரூ.	51

10 திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்,
கண்டரமாணிக்கம் ரூ. 101

11 " RM. AR. சுப்பிரமணியன் செட்டியார்,
கண்டரமாணிக்கம் (16—9—60) ரூ. 21

12 " " " (13-5-61) ரூ. 21

13 " லெ. கரு. கரு. கருப்பஞ் செட்டியார், ரூ. 11

14 " A. நாகப்பச் செட்டியார், மேலச்சிவபுரி (14-6-63) ரூ. 101

15 " அ.ராம.அ.லெ. அ. அருணாசலம் செட்டியார்,
தேவகோட்டை (17-6-60) ரூ. 51

16 " " " " (14-6-63) ரூ. 51

17 " அ.ராம.அ.லெ.மு.வி. முத்துவீரப்ப செட்டியார்,
தேவகோட்டை ரூ. 51

